

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியக்கு உட்பட்ட தாமரைகுளம் புதூர் கிளைக் கழக செயலாளர் அண்மையில் சாலை விபத்தில் சிக்கி இயற்கை எய்தினார். இந்நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று திருஉருவப்படத்திற்கு மலர்மாலை தூவி அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார் இதில் ஒன்றிய கழகச் செயலாளர் சி.என்.சண்முகம், மற்றும் சீராளம், வீரமங்கலம்மா.ரகு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 72 அ வட்டத்தில் பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன் முன்னிலையில் மாவட்ட செயலாளர் –அமைச்சர் பி.கே.சேகர்பாபு கழக கொடியேற்றிவைத்தார். நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, சரிதா மகேஷ்குமார், மு.சரவணன்.எம்.சி, ஜி.கிருஷ்ணகுமார்,புவனவதி, கினார்.ஆறுமுகம், தில்லைகதிரவன், க.எழிலன்,பகுதி அமைப்பாளர் சே. மணிமாறன், ந. வேலு,து.சங்கர், ஆமோஸ்,ருக்மணி, ரவிக்குமார், மாவுமில் சேகர், சாஸ்திரி நகர் குமார், ஜெய்சிங்ஜான் தாமஸ்,மகளிர் அணி கிரிஜா, ஜி.சங்கர், சீமா, வசந்தா, முகம்மது ரஃபி, யுவராஜ், கிஷோர், வேல்முருகன், வழக்கறிஞர்.அரவிந்தன்,கிரிதரன், ரூபகாந்தன், சி.ஆனந்த்,சாந்தா ரீட்டா,சந்தோஷ், ஆகாஷ், தியாகராஜன்,முரளி கிருஷ்ணன், முருகன், மாரியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ - வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர். நவ.23

திருவள்ளூர் மாவட்டம், திருவலங்காடு திருத்தணி கூட்டுறவு ஆலையில் 2024 25 ம் ஆண்டிற்கான கரும்பு அரவையினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவிக்கையில்,

திருவள்ளூர் மாவட்டம் திருவலங்காடு உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 202425 ம் ஆண்டிற்கான கரும்பு அரவையினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த 202425 ம் பருவத்தில் 2.00 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 9.50 விழுக்காடு சர்க்கரை கட்டுமானத்தில் 1.90 இலட்சம் குவிண்டால் உற்பத்தி செய்யப்படவுள்ளது. ஆலையின் இயந்திர தளவாடங்கள் நல்ல நிலையில் உள்ளது. கரும்பு அரவை எவ்விதம் நிறுத்தம் இல்லாமல் இயக்கப்படும் விவசாய பெருமக்கள் ஆலைக்கு கரும்பினை கொண்டு வந்து பயன்படுத்திக் கொள்ளுமாறு என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் கே.நர்மதா, திருத்தணி வட்டாட்சியர் திருமதி.மலர் விழி, கரும்பு பெருக்கு அலுவலர் பேரயப்பன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், ஒன்றிய குழு துணைத் தலைவர் சுஜாதா மகாலிங்கம், மாவட்ட கவுன்சிலர் காஞ்சிபாடி விஜயகுமாரி சரவணன், மாவட்ட நிர்வாகிகள் ஜெயபாரதி, களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், டி. கே.பாபு வழக்கறிஞர் ராஜா, தினகரன், செந்தில் குமார், வி.ஜெகதீசன், ஜி.ரமேஷ், சண்முகம், நீலாவதி சீனிவாசன் தொழிலாளர் சங்கத் செயலாளர் வெங்கடேஷ், தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். சண்முகம் உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளாட்சி பிரதிநிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

# தாம்பரம் மாநகர வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

## மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அறிக்கை!

தாம்பரம், நவ.23-

மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில், மாநகரத்திற்குட்பட்ட தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (23.11.2024 சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு, எனது தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையிலும் மேற்கு பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் வரவேற்புரையிலும் மாநகர மேயர் க.வசந்தகுமாரி பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ் எஸ்.சேகர். இரா.சுரேஷ். ஆ.நடராஜன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர் ஜி. கே.ரவி ஆகியோர் முன்னிலையில் கிழக்கு தாம்பரம். வேளச்சேரி பிரதான சாலை, கேம்ப் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீவாசுதேவா திருமண மண்டபத்தில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் கருத்துகளையும் வழங்கவுள்ளனர்.

இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்ட கழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள். மண்டலக்குழுத் தலைவர்கள், இருபால் மாமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள். வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள். இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – நா.சந்திரபாபு பங்கேற்பு!

# சோழிங்கநல்லூர் மத்திய பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, நவ. 23

சோழிங்கநல்லூர் மத்திய பகுதி பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி தி.மு.க. சார்பில் பாகமுகவர்கள் கூட்டம் (BLA2) இன்று ( 23.11.2024 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள எஸ்.வி.கணேச நாயக்கர் திருமண மண்டபத்தில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் ச.அரவிந்த்ரமேஷ்.எம்.எல்.ஏ. எனது தலைமையில் நடைபெறுகிறது. இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர், அவைத் தலைவர் தா.பஷீர் வரவேற்கிறார்.

வே.வீ.குமரேசன், வீ. தனசேகரன், கே.டி.ரவி, ப.சாந்திபசுபதி, ஜி.சங்கர் எம்.சி. வ.பாபு எம்.சி., அ. முருகேசன் எம்.சி., ஆர்.நாகராஜ், த.ராஜேந்திரன், ஜி. ரவி, எஃப் ஆரோன்(எ) அரசு, பா.தேவகுமார், எஸ். ஆர்.உமாபதி, கே.ஏழுமலை, எஸ்.தயாளன், ஆர். சுரேஷ்பாபு, கே.தேவேந்திரன், கோ. முருகவேல், எஸ். தாமோதரன், பி.கே.தங்கம், எஸ்.செல்வகுமார், எஸ்.பி. ஹரி முன்னிலை வகிக்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிர மணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சோழிங்கநல்லூர் தொகுதி பொறுப்பாளர், கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர். நா.சந்திரபாபு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பாலவாக்கம் க.சோமு, பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ. மதியழகன், ஜி.வெங்கடேசன், எஸ்.சங்கீதா பாரதிராஜன், எம்.கே.ஏழுமலை, மேடவாக்கம் ப.ரவி, ஆ.அரிகிருஷ்ணன், சி.பிரதீப், ரத்னா லோகேஷ்வரன், ஜெ.ஈ. பாண்டியன், கா.வீ.தியாகராஜன், பா.அருண் குமார், எம்.பார்த்திபன், என். அனிஷ், வி.எட்டியப்பன், எஸ்.பொன்னுவேல், த.விஜயபாலன், கி. ஸ்டாலின் மொழி, உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்குட்பட்ட பாகமுகவர்கள் (BLA2) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கழக தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கவனத்திற்கு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் – திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம்- 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம்- 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம்- 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப்படிவமான படிவம்-6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்-6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024.

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள்23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை).

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு:** வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும், மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் வாக்காளர் சேர்க்கும் பணிகளைதலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில்

**கே.சசிகுமார்** — தலைவர்
**பா.மணிமாறன்** — பொதுச்செயலாளர்
**டி.மெய்ஞானமூர்த்தி** — பொருளாளர்

# கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு குழந்தைகள், மாணவர்கள், ஆதரவற்றவர்கள், முதியோர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சிகள்!

| நாள் | நிகழ்ச்சி ஏற்பாடு | நிகழ்ச்சி விபரம் | இடம் |
|---|---|---|---|
| 25.11.2024 | P.சசிகுமார், திட்ட துணை செயலாளர் A.மகேந்திரன், கோட்ட செயலாளர், ஒரத்தநாடு | மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குதல் | அரசு தொடக்க பள்ளி ஒரத்தநாடு |
| 27.11.2024 | என்.பாலவெங்கடேஷ், திட்டசெயலாளர் | ஆதரவற்ற சாலையோர மக்கள் 200 பேருக்கு மதிய உணவு வழங்குதல் | தஞ்சாவூர் |
| 27.11.2024 | K.இருதயராஜ், கோட்ட செயலாளர் , தஞ்சாவூர் | ஆதரவற்ற முதியவர்களுக்கு காலை மற்றும் இரவு உணவு வழங்குதல் | ஓசானாம் முதியோர் இல்லம் தஞ்சாவூர் |
| 27.11.2024 | C.பிரகாஷ்,கோட்டசெயலாளர், தஞ்சாவூர் மத்திய அலுவலகம் B.மாரிமுத்து, கோட்ட செயலாளர், தஞ்சாவூர் நகரியம் | ஆதரவற்ற முதியவர்களுக்கு மதிய அசைவ உணவு வழங்குதல் | ஓசானாம் முதியோர் இல்லம் தஞ்சாவூர் |
| 27.11.2024 | A.ரமேஷ், திட்ட துணை செயலாளர் | ஆதரவற்ற சாலையோர மக்களுக்கு மதிய உணவு வழங்குதல் | பட்டுக்கோட்டை |
| 27.11.2024 | K.தம்பி பிரபாகரன், கும்பகோணம் வடக்கு | ஆதரவற்ற குழந்தைகளுக்கு காலை மற்றும் இரவு உணவு வழங்குதல் | அன்னை இல்லம் கும்பகோணம் |

தஞ்சாவூர் மாவட்ட திட்ட சங்க நிர்வாகிகள், கோட்ட செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்: தஞ்சாவூர், தஞ்சாவூர் மத்திய அலுவலகம், தஞ்சாவூர் நகரியம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, கும்பகோணம் மற்றும் கும்பகோணம் வடக்கு கோட்டங்களில் இளந்தலைவர் அவர்களின் பிறந்தநாளில் 27.11.2024 காலை இனிப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**என்.பாலவெங்கடேஷ்,**
**செயலாளர்**
**மின் கழக தொ.மு.ச., தஞ்சாவூர் மின் திட்டம்.**